உ
சிவமயம்



# இந்து சமய மன்றம்

1. இந்து சமய மன்றம்
2. இந்து சமய மாதர் மன்றம்
3. இந்து சமய இளைஞர் மன்றம்
4. இந்து சமய குழந்தைகள் மன்றம்

இவ்வாறான உள்ளமைப்புக்களைக் கொண்ட
இந்து சமய பேரவை வேண்டும்.


வெளியிடுவோர் :
சிவதர்ம வள்ளல், சிவநெறிப் புரவலர்,
திருக்குறட் காவலர், சமாதான நீதவான்
**க. கனகராசா அவர்கள்**
மில்க்வைற் தொழிலதிபர்
திருஆலவாய்
யாழ்ப்பாணம்.
1982.

உ
சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# இந்து சமய மன்றம்

இந்து சமய அன்பர்கள், அபிமானிகள், அடியார்கள்
எல்லோருக்கும் பணிவன்புடன் ஒரு வேண்டுகோள்.

## இந்து சமய மன்றம் அமைப்போம்

எல்லா ஊர்களிலும் எல்லா வயதினரும்,
சைவமும், தமிழும் நிலைபெற்று வாழத்
தொண்டு செய்வோம் வாரீர்.

ஊர்கள் தோறும் இந்து சமய மன்றம் உண்டாக்கித்
தொண்டு செய்தல் வேண்டும்.

அடியார்கள், தொண்டர்கள், அன்பர்கள்
சேர வாரீர் - சேவை செய்வோம்.

★

*வெளியிடுவோர்:*

மில்க்வைற் தொழிலதிபர், சமாதான நீதவான்
**க. கனகராசா அவர்கள்**

★

*தயாரித்தவர்:*

**க. சி. குலரத்தினம்**
(மில்க்வைற் செய்தி கௌரவ ஆசிரியர்)

சிவமயம்

## எங்கள் சமயம்

எங்கள் சமயம் சைவசமயம். எங்கள் இறைவன் சிவபெருமான். சிவபெருமான் உலகத்துக்குக் கருத்தா. அவரே முழுமுதற் கடவுள். அவர் பரம பிதா. அவர் மற்றத் தெய்வ மூர்த்தங்களில் அதிட்டித்து நின்று அருள்புரிபவர். நாங்கள் சிவாலயத்திலாயினும், அம்மன் கோயிலிலாயினும், விஷ்ணு ஆலயத்திலாயினும், பிள்ளையார் கோயிலிலாயினும், முருகனாலயத்திலாயினும், வைரவர் கோயிலிலாயினும் வழிபடலாம். அங்கெல்லாம் நீக்கமற நின்றருள்புரிபவர் ஒரே கடவுள்தான். கடவுள் ஒருவரே. அவர் அருள்புரியும் வகை பலவாகும். அவற்றைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்தலாகாது. நாம் கடவுளை நம்பி, அவரை வழிபட்டு வரம் பெறுதலே நமது கடமை. ''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் அருமைத் திருவாக்கு.

## சைவத்தின் பழைமை

எங்கள் சமயம் பழைமையானது, புனிதமானது, சனாதனமானது, வியாபகமானது, அன்பை அடிப்படையாகக் கொண்டது. எங்கள் சமயத்தில் நின்று முனிவர்கள், நாயன்மார்கள், தொண்டர்கள், சித்தர்கள், முடி மன்னர்கள், ஆதீனகர்த்தர்கள், தம்பிரான்கள், தவசிப்பிள்ளைகள், சமயாசாரிகள், மாதரசிகள் உய்திபெற்றுள்ளார்கள். உய்திபெற்ற உத்தமர்கள் எமக்கு வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அவர்கள் விட்டுச் சென்ற அருஞ் செல்வங்களை நாம் பேணிப் பாதுகாத்தல் நம் தலையாய கடமையாகும்.

## எம்முன்னோர் அளித்த அருஞ் செல்வங்கள்

வையகத்தில் வாழும் வகை தெரிந்து வாழ்ந்த எம் முன்னோர்கள், எமக்காகத் தங்கள் இறை அநுபவத்தை

யும் வாழ்க்கை அநுபவத்தையும் பெரு நூல்களில் பெய்து தந்துள்ளார்கள். நாம் வாழும் வகையில் வாழ்வதற்காக வழிவகுத்துப் பாதை அமைத்துள்ளார்கள். உய்வைத்தர எமக்கு வழிகாட்டிய உத்தமர் வழியை நாம் பின் தொடர்வோமாக.

எம் முன்னோர் எமக்கு விட்டுச் சென்ற கலைஞானங்கள் தமிழிலும் வட மொழியிலும் உள்ளன. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பிரபந்தங்கள், திருத்தொண்டர் புராணம், திருக்குறள், சைவசித்தாந்த சாத்திரங்கள், பண்டார சாத்திரங்கள், திருப்புகழ் முதலியனவும்; இன்னும் பழைமையான வேதங்கள், வேதாங்கங்கள், உப வேதங்கள், ஆகமங்கள், தர்ம சாஸ்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலியனவும் எமது சனாதன சைவக் களஞ்சியங்களாகும்.

## எம்முன்னோர் அமைத்தவை

எங்கள் முன்னோர்கள் தமக்கென அமைத்த வீடுகள், மாளிகைகள், அரண்மனைகள் யாவும் இன்று நிலைபெறா விட்டாலும், அவர்கள் இறைவனுக்கென அமைத்த ஆலயங்களும் இறைபணிக்கென அமைத்த மடங்களும் மடாலயங்களும் ஆதீனங்களும் இன்றும் உள்ளன. இறை பணி செய்த தனியடியார்கள் அறுபத்துமூவரின் வரலாறுகளும், தொகையடியார்கள் ஒன்பது குழுவினர் தம் வரலாறுகளும் எமக்குக் கிடைத்துள்ளன.

இருபத்தேழு நட்சத்திரங்கள் பன்னிரண்டு இராசிகளுள் அமைந்து, எம்மை வாழ்வித்தாற்போல, இருபத்தேழு மெய்ஞ்ஞானிகள் அருளிய 18000 திருப்பாடல்கள் பன்னிரு திருமுறைகளில் அமைந்து எமக்கு வாழ்வு தருகின்றன. திருமுறைகளைப் போற்றி வந்தால் செந்தமிழ் வளரும், சிவநெறி வாழும், பண்ணிசை தழைக்கும்.

## நாம் செய்ய வேண்டியன

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று திருநாவுக்கரசுநாயனார் தமது எண்பத்தொரு ஆண்டு அநுபவத்தைப் பாடியருளியுள்ளார். எங்கள் சமயம் எல்லாச் சமயங்களுக்கும் தாய் போன்றது. எங்கள் சமயம் மேலும் செழித்தோங்குதல் வேண்டும். நாம் எல்லோமும் நல்ல சிந்தனை, நல்ல குணம், நல்ல செயல் உள்ளவராய் வாழுதல் வேண்டும். நல்லொழுக்கம், கடவுட்பற்று, நாட்டுப் பற்று, தமிழ்ப்பற்று, சைவப்பற்று உள்ளவராதல் வேண்டும்.

## மன்றங்கள் அமைப்போம்

தனியொருவர் தனித்துநின்று தொண்டு செய்வதிலும் பார்க்கக் கூட்டம், சங்கம், சபை, மன்றம் அமைத்துப் பணி செய்தல் சுலபமாயும் பரவலாயும் பலமுள்ளதாயும் அமையும். நல்ல நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைத்த பல சங்கங்கள் ஒன்று சேர்ந்து மகாசபை அமைத்தல் ஐக்கியத்தைப் பலப்படுத்தும். மன்றங்கள் பல துறைகளிலும் பணி புரியலாம்.

## திருக்கோயிலை மையமாகக் கொள்ளலாம்

அயலில் உள்ள ஆலயத்தின் மண்டபத்தை மையமாகக் கொண்டு இந்து சமய மன்றம் ஒன்றை அமைக்கலாம். ஆலயம் தொழுவது சாலவு நன்று, கோபுர தரிசனம் கோடி புண்ணியம். கோயிலடியிற் கூடும் மன்றத்தினர், கோயிலை உள்ளும் வெளியும் கூட்டித் துப்புரவாக்கலாம். பூந்தோட்டம் அமைக்கலாம். மாலை வேளைகளிற் கூட்டுப் பிரார்த்தனை நடத்தலாம். கோயில் மண்டபத்தில் புராண படனஞ் செய்யலாம். இராமாயண பாரத பிரசங்கஞ் செய்யலாம். புராணங்கள் படிப்பதாலும் கேட்பதாலும் சமய ஞானம் உண்டாகும். பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், விநாயக புராணம் முதலாக நல்ல புராணங்கள் உண்டு.

மாதந்தோறும் பூரணை நாட்களில் சமயப் பெரியார்களை அழைத்து வந்து பேசவைத்துக் கேட்டுப் பயன் அடையலாம். மாதந் தோறும் வருகின்ற நாயன்மார் குருபூசைகள், சந்தான ஆசாரியர் குருபூசைகள், சித்தர்கள், யோகியர் குருபூசைகளைச் செய்யலாம்.

ஆலயத்தின் வருடாந்த உற்சவங்கள் என்னும் நைமித்திய விழாக்களின் போதும், சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, விநாயக விரதம் போன்ற காலங்களிலும் திருக்கோயிலில் சிறப்பான தொண்டுகள் செய்யலாம். ஆண்டு தோறும் சமய பாடப் பரீட்சை நடத்திப் பரிசுகள் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கலாம்.

## நாயன்மார்களின் அடிச்சுவட்டில்

மாதம் ஒருமுறை எல்லோரும் சேர்ந்து திருக்கோயிலில் உழவாரப் பணி செய்யலாம். அப்பர் அடிகள் வீதிகளையும், மதில்களையும், கோபுரங்களையும், விமானங்களையும், பிராகாரங்களையும் தூய்மையாக்கிய முறையில் நாம் பணிபுரியலாம். திருக்கோயிற் பணிபுரியும் போது, நான் என்னும் அகங்காரமும், எனது என்னும் மமகாரமும் நீங்கும். மனத் தூய்மை உண்டாய இடத்தில் திருவருள் பதியும்.

## திருப்பணியில் எல்லோரையும் ஈடுபடுத்துதல்

ஊரிலும் அயலிலும் உள்ள மனைகள் தோறும் பிடியரிசி சேகரித்து மாதந்தோறும் கோயில் வீதியில் நீர்க்கஞ்சி வழங்கலாம். இச் செயலால் எல்லோரையும் சிவப்பணியில் ஈடுபடுத்துவதோடு, அடியார்களைச் சிவமாகப் பாவித்துப் பழகும் பழக்கமும் உண்டாகும். பாவனை பக்திவழிக்கும் படிப்பு வழிக்கும் அரிய சாதனமாகும். யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி என்பது திருமூல நாயனார் திருமந்திரம். பூசையின்றிக் கிடக்கும் ஆலயத்தில் ஒரு குடம் நீரும் ஒரு பச்சிலையுமாவது கொண்டு பூசிக்க வழி செய்யலாம். யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை. திருவிளக்கு ஏற்றுவதற்கு வீடுகள் தோறும் தேங்காய் எண்ணெய், இலுப்பெண்ணெய் சேகரித்து விளக்கேற்றச் செய்யலாம்.

## நாயன்மார் நினைவு

குங்கிலியக்கலய நாயனார் குருபூசையை நினைத்துக் கோயிலில் சாம்பிராணி குங்கிலியம் புகையச் செய்யலாம். அமர்நீதி நாயனார் நினைவாக அடியவர்களுக்கு ஏதாவது ஆடை, துணி வகை உதவலாம்; உருத்திரபசுபதி நாயனார் நினைவாக அந்தணர்களைக்கொண்டு உருத்திரம் ஓதச் செய்யலாம். தண்டியடிகள் நினைவாகத் திருக்குளத்தையும் தீர்த்தக் கிணற்றையும் தூய்மை செய்யலாம். ஆண்டு தோறும் அயலில் உள்ள குளங்களில் மண்ணெடுத்து ஆழமாக்கி அதிக நீரைத் தேக்கி அயலைப் பசுமையாக்கலாம். நந்தவனங்கள் வைத்துப் பூவெடுத்துச் சிவகாமியாண்டாரை நினைவிற் கொள்ளலாம். அப்பூதி அடிகள் நினைவாகத் தண்ணீர்ப் பந்தல் அமைத்துக் குடி தண்ணீர் வழங்கலாம். அரிவாட்டாய நாயனார் நினைவாகத் திருக்கோயில் மடைப் பள்ளியைத் துப்புரவாக்கலாம்.

ஆனாய நாயனார் நினைவாகத் திருக்கோயிலில் சங்கு ஊதுதல், சேமக்கலம் அடித்தல், புல்லாங்குழல் ஊதுதல் முதலியன செய்யலாம். மணியடிக்கலாம். பண்ணோடு திருமுறைகள் பாடலாம். ஓதலாம். பஜனை செய்யலாம். இயற்பகை நாயனார் நினைவாகத் திருக்கோயில் வாகனங்களைப் பழுது பார்த்துத் தூசு துடைத்து, வர்ணம் பூசிக் காக்கலாம். ஏனாதி நாயனார் நினைவாகத் திருக்கோயிலுக்குத் திருநீறு கொடுக்கலாம். திருநீற்றுத் தொண்டு பெரிய சிவத் தொண்டு. திருநீற்றுப் பைகள் செய்து அடியார்களுக்கு உபகரிக்கலாம்.

ஐயடிகள் காடவர்கோன் நினைவாகத் திருக்கோயில்களுக்கு பாதயாத்திரை செய்து போகும் வழியெங்கும் பக்திப் பாடல்கள் பாடலாம். கணம்புல்லர் நாயனார், கலிய நாயனார் நினைவாகத் திருக்கோயில் வீதிகள், குளக்கரைகளில் வேம்பு, இலுப்பை மரங்களை நாட்டி எண்ணெய் வித்துக்கள் திரட்டலாம். கழறிற்றறிவார் நினைவாகத் திருக்கோயிலருகில் பசுமடம் அமைத்துப் பசுக்கள் வளர்த்துக்

கோயிற் பூசைக்குப் பால் கொடுக்கலாம். பஞ்சகௌவியம் கொடுக்கலாம்.

கணநாத நாயனார், காரி நாயனார் நினைவாகத் திருக்கோயிலில் தேவாரம் ஓதுதல், பனையோலையில் எழுதித் திருமுறை மண்டபத்தில் பூசைக்கு வைத்தல், சமய பாட வகுப்பு நடத்திப் பரிசுகள் கொடுத்தல் செய்யலாம். இன்னும் திருக்கோயில் வரலாற்றையும் கோயில் சம்பந்தமான ஊஞ்சற் பாட்டு, புகழ்மாலை முதலியனவற்றையும் அச்சிட்டுப் பரப்பலாம். புகழ் பேசலாம்.

பாண்டிய மன்னரின் முதன் மந்திரியார் என்னும் பெருமை மிக்க குலச்சிறை நாயனார் நினைவாக நம்மவருள் ஏழைகள், விபரந்தெரியாதவர்கள் எங்கள் மதத்தை விட்டுப் போகாமல் நல்லுறவு பூகட்டிச் சைவத்தைக் காக்கலாம். சமயத் தொண்டர்களை ஊக்கி உதவிபுரியலாம். திருத்தொண்டர் கூட்டத்தைப் பலப்படுத்தலாம்.

சடைய நாயனார் நினைவாக அந்தணர் பூசகர் அர்ச்சகர்களுக்கு உதவி செய்யலாம். அவர்களை ஒழுங்காகப் பூசை செய்து வேதம் ஓதச் செய்யலாம். சக்தி நாயனார் நினைவாகச் சேக்கிழார் விழா எடுத்துப் பெரியபுராணப் பேருரைகள் பேசுவிக்கலாம். திருத்தொண்டர் திறத்தை நினைவு படுத்தலாம். சிறுத்தொண்ட நாயனார் நினைவாகச் சிறுவர்களுக்கு ஆதரவளிக்கலாம். ஆதரவற்ற சிறுவர் சிறுமியரைத் திருக்கோயிற் பரிபாலனத்தில் வளர்க்க வழி செய்யலாம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் நினைவாகச் செந்தமிழ் வளர்ச்சிக்கான வழிகளைச் செய்யலாம். பண்ணிசை வகுப்புகளை நடத்தலாம். பயன்தரு மூலிகைகளை நந்தவனத்தில் உண்டாக்கி மருந்துதவி செய்ய வழிவகுக்கலாம். ஓதுவாமூர்த்திகள், திருமுறையாளர்களுக்குத் தாளம் கொடுக்கலாம். திருநீலகண்ட நாயனார் நினைவாகப் பண்ணிசை அரங்கு அமைத்து இசைக் கருவிகளின் இயக்கத்தைப் பயிற்றலாம்.

புகழ்ச் சோழர், புகழ்த் துணையார் நினைவாக சிறுவர் சிறுமியர்களுக்கு உரிய காலத்தில் சிவதீட்சை வைப்பித்துச் சிவசின்னங்களின் பெருமையை அறியச் செய்யலாம். பெரியவர்கள் இரண்டாம் தீட்சை பெறுதல், சிவாசாரியர்கள் விசேட தீட்சை பெறுதல் முதலிய வழிகளையும் செய்து உதவலாம். சிவாகம முறைகளை நடைமுறையில் நிலைபெறச் செய்யலாம். சைவ சமயத்தவர்களுக்கு ஆகமம் அத்தியாவசியம். சைவர்கள் ஆகம மார்க்கத்தவராவர்.

## மாதர் சங்கங்கள்
## பெரியபுராணப் பெண்கள் நினைவு

இந்து சமய மாதர் சங்கம் சமூகத்திலும் நாட்டிலும் இன்றியமையாத அங்கமாகும். நாரியர் உயர்ந்தால் நாடு உயரும். பதினறு ஆசிரியர்களின் சேவையிலும் பார்க்கத் தனித்ததொரு தாயின் சேவை, பங்களிப்பு பெரியது ஆகும். எனவே சைவப் பெண்கள் திலகவதியார், காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார், பரவையார் முதலான பெரியபுராணப் பெண்ணடியார்களை மனத்திற் கொண்டு பெருமளவில் சைவப்பணி புரிதல் வேண்டும். சைவப் பெண்களின் நல்ல சிந்தனை வலுவினுல் சந்ததி சைவக் காழ்ப்புடன் உருவாகும்.

பெண்கள் நலம் பேணுவதற்குப் பெண் தொண்டர்களே தாய்மை உள்ளத்தோடு முன்வருதல் வேண்டும். காரைக்காலம்மையார் நினைவாகத் திருக்கோயில் வளவுகளில் மாமரங்கள் நட்டு வளர்க்கலாம். மாம்பழம் இறைவர்க்குரிய முக்கனிகளுள் ஒன்று. மங்கையர்க்கரசியார் நினைவாக வறிய பெண் பிள்ளைகளுக்குப் பெரிய வீட்டுப் பெண்மணிகளல்லார்கள் புலமைப் பரிசில் கொடுத்துப் பெரிய படிப்புக்கு வசதி வாய்ப்பு அளிக்கலாம்.

வீடுகள் தோறும் பெண் குழந்தைகள் பண்ணும் பரதமும் பயின்று சைவத் தமிழ்ப் பண்பாட்டில் வாழுதல் வேண்டும். பெண் குழந்தைகள் நுண்கலைகளிற் சிறந்து விளங்க வேண்டும்.

## திருத்தொண்டின் நெறி வாழவேண்டும்

திருத்தொண்டர்களின் பெரு முயற்சியாலேயே சைவ சமயம் நிலைபெற்று வந்துள்ளது. சென்ற காலத்துப் பழுதிலாத் திறம்போல இனிவரும் எதிர்காலத்திலும் சைவ சமயம் நிலவுவதற்கு நாமே பொறுப்பாளிகளாய்ப் பணி புரிதற்கு முற்படுதல் வேண்டும். தொண்டுசெய்து சைவத்தையும் தமிழையும் வாழவைத்தால் அவை எங்கள் சந்தானங்கள் என்ற முறையில் சனாதனமாக நிலைத்து நிலவும்.

## சந்தானங்கள்

குளம் தோண்டுதல், கோயில் கட்டுதல், மரங்களை நடுதல், குழந்தைகளைப் பெறுதல் சந்தானங்கள் எனப் பெயர்பெறும். சந்தானங்களைத் திருவள்ளுவர் எச்சம் என்பர். எமக்குப்பின் எம் பெயரால் எஞ்சி நிற்பன எம் எச்சங்கள்: நாம் பாடசாலை அபிவிருத்தி, மருத்துவமனை அபிவிருத்தி, அநாதர்களை ஆதரித்தல், பசுக்காத்தல், பனை அபிவிருத்தி செய்தல், மரம் நடுதல், நூல்நிலையம் அமைத்தல், கிணறு தோண்டுதல், சுமைதாங்கி அமைத்தல், ஆவுரஞ்சிக் கல் நடுதல், பஸ் தரிப்புகளில் நிழல் செய்தல், வைத்தியசாலைகளில் உதவுதல், புலமைப் பரிசில் வழங்கல் முதலிய தருமச் செயல்கள் எமது சந்தானங்களாக நின்று நிலவும்.

குளங்களை ஆழமாக்க விரும்புவோர் சங்கங்கள் மூலம் மில்க்வைற் தொழிலதிபருக்கு விண்ணப்பஞ் செய்தால் அவர் சேவை செய்பவருக்கு வேண்டிய அளவில் மண்வெட்டிகளும் மண்சுமக்கத் தாச்சிச் சட்டிகளும் இரவலாக உதவுவார். தாமும் கூடவந்து ஒத்துதவி செய்வார்.

மரம் நாட்டும் மகத்தான பணிசெய்ய விரும்பும் தொண்டர்களுக்கு மில்க்வைற் தொழிலதிபர் வேம்பு, இலுப்பை, மலைவேம்பு, நெல்லி, தேக்கு, இப்பில் இப்பில், சவுக்கு, சஞ்சீவி, முதலிய மரக்கன்றுகளை இலவசமாகத் தருவார்: இன்னும் தமக்குக் கிடைக்கும்போதெல்லாம் ஈரப் பலாக்

கன்றுகள் தருவார். மேலும் அரசாங்கப் பண்ணைகளில் கிடைக்கும்போது விரைவிற் காய்க்கும் தென்னம்பிள்ளைகளையும், அதிசம் காய்க்கும் தென்னம்பிள்ளைகளையும் வாங்கிய விலைக்கே விநியோகஞ் செய்வார்.

## குழந்தைகள் மன்றம்

சின்னஞ்சிறு குழந்தைகள் தாமாக இயங்கமாட்டார்களாதலால் பெரியவர்கள் அவர்களை நெறிப்படுத்திப் பழக்கிவிட்டால் அவர்கள் பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாக வளர்வார்கள். துளசிச் செடி, கர்ப்பூரவள்ளி முதலியன வளரும்போதே பயன்தரும் முறையைக் குழந்தைகள் மனங்கொள்ளவைத்தல் வேண்டும். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், மெய்கண்டதேவர், பிரகலாதன், துருவன் முதலானேர் இளமையிலேயே பெரியவர்களானவர்கள். எனவே, குழந்தைகள் எங்கள் எதிர்காலச் செல்வங்கள்.

## பிள்ளைகள் செய்யத் தகுந்தவை: நல்லவை.

1. சூரியன் உதிக்குமுன் நித்திரைவிட்டெழுதல்
2. காலைக் கடன் கழித்துக் கழுவிச் சுத்தஞ் செய்தல்
3. திருநீறு பூசிச் சிவசிவ எனப் பலமுறை சொல்லல்
4. காலையில் நீராடி அழுக்கைப் போக்குதல்
5. அழுக்கில்லாத உடைகளையே அணிதல்
6. காலை மாலை கடவுளைத் தொழுதல்
7. இலகுவான தேவாரங்களைப் பாடமாக்குதல்
8. இயன்றளவு திருக்குறள் பாடமாக்குதல்
9. காலை மாலை பாடங்களைப் படித்தல்
10. மாலையில் அளவோடு விளையாடுதல்
11. வீட்டிலே கிடைத்ததை உண்ணுதல்
12. பாடசாலைக்கு ஒழுங்காகப் போதல்
13. அம்மா, அப்பா, ஆசிரியர் சொற்கேட்டு நடத்தல்
14. எவர்களோடும் இனிய வார்த்தை பேசுதல்
15. எல்லார் மேலும் அன்புள்ளவராய் இருத்தல்
16. பெரியவர்களைக் கண்டால் வணங்குதல்

17. என்றும் எந்தவேளையிலும் உண்மை பேசுதல்
18. நித்திரைக்குப் போகுமுன் தேவாரம் பாடுதல்
19. நல்லபொழுதாகப் போதல் வேண்டும் என்று இறைவனை வேண்டுதல்
20. ஒரு நாளில் ஒரு சதமாயினும் தர்மம் கொடுத்தல்
21. படுக்குமுன் இறைவன் நாமத்தை 108 முறை சொல்லுதல்

## பிள்ளைகள் செய்யத் தகாதவை: தீயவை.

1. ஒரு நாளும் பொய் பேசாதே
2. பிறர் பொருளுக்கு ஆசைப்படாதே
3. பிறர் பொருளைக் களவு எடுக்காதே
4. எவருக்கும் துன்பம் செய்யாதே
5. எந்த உயிரையும் கொல்லாதே
6. அடிக்கடி போசனம் பண்ணுதே
7. அழுகிய பழங்களைப் புசியாதே
8. ஈ மொய்த்த பண்டங்களைப் புசியாதே
9. படிக்கிற நேரத்தில் விளையாடாதே
10. புத்தகம் கொப்பிகளைக் கிழிக்காதே
11. பாடசாலைத் தூணில், சுவரில் கீருதே
12. மிருகங்களுக்குக் கிட்டப் போகாதே
13. நடுத் தெருவில் நடந்து போகாதே
14. வீட்டில் இல்லாத பொருளைக் கேட்டு அழாதே
15. எவரோடும் சண்டைக்குப் போகாதே
16. மூத்தவர்களைப் பெயர் சொல்லி அழையாதே

## பாடசாலைத் தொண்டு

பாடசாலைகளும் ஆலயங்களே. பாடசாலைகளை வித்தியாலயங்கள் என்பர். பள்ளித்தலம் அனைத்தும் கோயில்கள் செய்வோம் என்பது பாரதியார் பாடல். இந்து சமய மன்றத்தார் பாடசாலைகளில் அரிவரி வகுப்பிற் படிக்கும் பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்வதற்கு வேண்டிய அரிவரி ஏடுகளை மில்க்வைற் தொழிலகத்திற் பெற்றுக் கொடுக்கலாம். அரிவரி எழுத்து மட்டைகள்,

வாய்ப்பாட்டு மட்டைகள் முதலியவற்றையும் வேண்டும் போது பெற்று விநியோகிக்கலாம்.

ஆரம்ப வகுப்புகளில் பயிலும் பிள்ளைகளுக்கு ஆத்தி சூடி, கொன்றைவேந்தன் முதலிய நீதி நூல்களையும், ஆறுமுகநாவலர் அவர்களின் நீதி வாக்கியங்களையும் கொடுத்து மனனஞ் செய்விக்கலாம். இலகுவான திரு முறைப் பாடல்கள், இலகுவான திருக்குறள்களைத் தொகுத்து மனனஞ் செய்யக் கொடுக்கலாம். இங்ஙனமே மேல் வகுப்பு மாணுக்கர் மாணுக்கியருக்கும் தரங்களுக் கேற்ற நூல்களை உபகரிக்கலாம். தரங்களுக்கு ஏற்ற முறையில் பரீட்சைகள் நடத்திப் பரிசில்கள் சான்றிதழ் கள் கொடுக்கலாம்.

## திருவிழாக் காலத் தொண்டு

காலந்தோறும் ஊரிலும் அயலூர்களிலும் நடைபெறும் உற்சவங்கள் என்னும் திருவிழாக் காலங்களில் திருக்கோயில் களுக்கும், அங்கே வந்து கூடும் அடியவர்களுக்கும் பலவித மாகத் தொண்டு செய்யலாம். போக்குவரத்து வண்டி வாக னங்களின் ஒழுங்கு முறைகளைச் சாரணர்களாயுள்ளவர்கள் கவனிக்கலாம்.

ஆயிரக் கணக்கானோர் வந்து கூடும்போது சுத்தம் சுகா தாரம் முதலியவற்றைக் கவனிக்கலாம். கோயில் வீதிகளில் குப்பை கூளங்களைப் போடாதவாறும், போடப்பட்ட இடங் களைத் துப்புரவாக்கியும், களவுகள், வீண்வார்த்தையாடல், சண்டை பிடித்தல் முதலியன உண்டாகாமலும் கண்காணிக் கலாம்.

இன்னும் சனங்கள் ஒழுங்காகப் போகவும் வரவும் வழி வகுத்துக் கொடுக்கலாம். உற்சவ மூர்த்திகள் எழுந்தருளும் போது, சுவாமி காவுதல், குடை பிடித்தல், தீப்பந்தம் பிடித்தல், திருமுறையோதல் முதலியன செய்யலாம். நல்ல வர், பெரியவர், செல்வர்களாயுள்ளவர்களின் பொருட் செலவு கொண்டு திருமுறை, திருப்புகழ் முதலிய பக்திப்

பாடல்களின் தொகுப்புகளைப் பதிப்பித்து அவர்கள் பெயரால் இலவசமாக வழங்கலாம். கோயில் வீதிகளில் அமைதியான இடத்தில் சைவப் பிரசாரம், சைவப் பிரசங்கம், திருமுறை ஓதுதல் முதலியன செய்யலாம்.

## நால்வர் குருபூசை நாட்கள்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர், திருநாவுக்கரசு நாயனுர், சுந்தரமூர்த்தி நாயனுர், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய சமய குரவர்கள் குருபூசைகளை விமரிசையாகக் கொண்டாடி, அவர்களின் திருவுருவங்களையோ படங்களையோ ஊர்வலமாக எடுத்துச் சென்று வீடுகள்தோறும் மங்கல வரவேற்புகள், மண்டகப்படிகள் வைப்பித்து வணங்கச் செய்து திருமுறைகளின் தொகுப்பு நூற் பிரதிகளை வழங்கலாம்.

சமயகுரவர் நால்வரும் சைவசமயத்தவர்களுக்கு உய்வைத் தரச்செய்த உத்தமர்கள். அவர்களுடைய பொற் பாதங்கள் எங்கள் உயிர்த் துணை என்று சைவ எல்லப்ப நாவலர் பாடியுள்ளார். நால்வர் திருவுருவப் படங்களை எல்லோரும் தங்கள் வீடுகளில் வைத்துப் பூசிக்கத்தக்கதாக வர்ணப் படமாக மில்க்வைற் தொழிலதிபர் நல்ல தாளில் அச்சிட்டு இலவசமாக வழங்குகின்ருர்.

நால்வர் பெருமக்களும் பிற ஞானிகளும் முனிவர்களும் தில்லை என்றும், சிதம்பரம் என்றும் கோயில் என்றும் பெயர் பெற்ற பொன்னம்பலத்தைத் தரிசித்து அங்கே ஆனந்தத் தாண்டவம் ஆடும் நடராசமூர்த்தியின் அற்புதக் கோலத்தைக் கண்டு களித்துச் சிந்தை நிறைவு கொண்டவர்கள். அந்த நடராச மூர்த்தியின் அழகிய திருக்கோலத்தை மில்க்வைற் தொழிலதிபர் அழகாக அச்சிட்டு இலவசமாக வழங்குகின்ருர்.

இந்துசமய இளைஞர் செய்யத்தக்க இன்னெரு மகத்தான சாதனை இளைஞரிடை யோகாப்பியாசம், பிராணுயாமம் செய்யப் பழக்கி விடுதலாம். உடம்பின் வலுவுக்கு வெறும்

தேகாப்பியாசம் போலல்லாமல், யோகாசனம் உடம்புக்கும் உடம்பின் உள்ளுறுப்புக்களுக்கும் உள்ளத்துக்கும் உயிர்ப்புக்கும் பெருமளவில் உறுதி தருவதாகும். யோகாப்பியாசத்தால் நோய் வராமல் தடுக்கலாம். அரோக திடகாத்திர தேகத்தோடு வாழலாம். யோகாப்பியாசத்தால், பிராணாயாமத்தால் மனம் சுத்தமாகும். தூய்மையான மனமே உயர்ந்த மந்திர சக்தி. தூய்மையான மனத்தில் படிக்கும் பாடங்கள் நன்கு பதியும்.

## ஞானரதத்தின் நினைவும் செயலும்

ஞானவேலேந்தும் ஞானப் பழமாகிய சுப்பிரமணியப் பெருமான், துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தின் பொருட்டுச் சூரபன்மனுடன் யுத்தஞ்செய்ய எழுந்தருளினூர். அச் சமயம் தெய்வ சக்திகள் யாவும் அவர் மீது வந்து பொருந்தின. அந்த வழியில் இன்று தமிழ்நாட்டில் ஞான ரதம் சைவப்பணி புரியப் புறப்பட்டுள்ளது. சமூகப் பிரச்சினையொன்றைச் சமயப் பிரச்சினையாக்கிச் சைவத்தை மாசு படுத்தும் சக்திகளைத் தரைமட்டமாக்கும் வகையில் ஞான ரதம் ஊர்வலம் செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் பழனி, திருச்செந்தூர், திருவண்ணாமலை, திருப்பேரூர், திருப்பதி முதலிய திருத்தலங்கள் பலவற்றின் திருவருள் வன்மை பொலியப்பெற்ற ஞானரதம் என்னும் தேரில் ஞானவேல் தாங்கிய ஞானப்பழமாய பழனியாண்டவன் பவனி பக்தி மார்க்கத்தில் பயனளிப்பதாக என்று காமகோடி பீடாதிபதிகள், பேரூராதீன அடிகளார், அறநிலையப் பொறுப்பதிகாரிகள் முதலானோர் ஆசி வழங்கியுள்ளார்கள். ஒலிப்பதிவுகள், ஒளிப்பதிவுகள் கொண்டு பிரசாரஞ் செய்யும் ஞானரதத்தினைப்போல நம் இளைஞர்களும் நால்வர் குருபூசை ஊர்வலத்தில் பிரசாரஞ்செய்து சைவத்தை வளர்க்கலாம். பக்திப் படங்கள் காட்டலாம், பஜனை செய்யலாம். ஞானப்பயிரை வளர்க்கலாம்.

## புகையும் மதுவும்

சைவ இளைஞர் மன்றத்தார் செய்யவேண்டிய மற்றொரு சாதனை சமூக சேவைக்குரிய சேவையாகும். புகையிலையும் மதுபானமும் கொடிய நஞ்சுகள் என்று வைத்திய நிபுணர்கள் உலகமெங்கும் கூறிவருகிறார்கள். இவை இரண்டும் கொடிய அரக்கர்களாகும்.

சுருட்டு, சிகரெட், பீடி புகைத்தலால் கண், இருதயம், நுரையீரல், நரம்புகள் பழுதடைகின்றன. மதுபானம் எதுவாயினும் நாசத்தை உண்டாக்கும் இயல்பினது. புகையிலையும் மதுபானமும் ஆயுளை வெகுவாகக் குறைக்கும் என்று நிபுணர்கள் கூறுவதால், இளைஞர்கள் இவை இரண்டையும் சமூகத்தில் பரவாதிருக்கப் பிரசாரஞ் செய்யலாம். இவற்றைத் தவிர்க்கலாம்.

## காமகோடிப் பெரியாரின் பத்து அம்சத் திட்டம்

1. விடியற் காலத்தில் நித்திரைவிட்டெழுந்ததும், இறைவனைத் தொழுக. இதற்கு இரண்டு நிமிட நேரம் போதும்.
2. இன்று நல்ல பொழுதாகப் போதல் வேண்டும் என்று இறைவனிடம் இரந்து வேண்டுகோள் விடுக்க,
3. கங்கையாறு, பசு, அரசமரம், புனித நூல், தீபசோதி இவற்றை ஒரு நிமிடம் நினைவிற்கொள்க.
4. தினந்தோறும் ஆலயம் தொழுக. முடியாவிட்டால் வெள்ளிக்கிழமைகளிலாவது தவறாமல் தொழுக.
5. அயலில் உள்ளவர்களிடம் அன்பு செலுத்துக.
6. மிருகங்கள், பறவைகள், பூச்சிகள், புழுக்கள் முதலிய உயிரினங்களுக்கு உணவு அளித்து உண்க.
7. ஒரு நாளைக்கு ஒரு காசாயினும் தர்மஞ் செய்க.
8. நெற்றியில் திருநீறு முதலியன ஏதாவது இட்டுக்கொள்க.
9. நித்திரைக்குப் போகுமுன் இறைவன் திருநாமத்தை 108 முறை சொல்லுக.

10. அன்றாடம் செய்கின்ற நல்வினை தீவினை என்பனவற்றை நினைத்துப் பார்க்க. இயன்றால் நாட்குறிப்பில் எழுதிக் கொள்க. எல்லாவற்றுக்கும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டி முறையிடுக.

## ஆலய தரிசனம்

ஆலய தரிசனத்தின் அவசியத்தைப் பெரியவர்கள் எல்லோரும் வற்புறுத்தியுள்ளார்கள். எங்கும் நீக்கமற அருவமாய் நிறைந்திருக்கும் கடவுள் ஆலயத்தில் அருள் மூர்த்தமாய் எழுந்தருளியுள்ளார். ஆலயந் தானும் அரனெனத் தொழுமே என்று மெய்கண்டார் சிவஞான போதத்தில் அருளியதை, அருணந்தி சிவாசாரியார் திருக்கோயிலுள்ளிருக்கும் திருவுருவந் தன்னைச் சிவனெனவே நினைந்தவர்க்குச் சிவனுறைவன் ஆங்கே என்றருளியுள்ளார். எனவேதான் ஔவையார் ஆலயந் தொழுவது சாலவு நன்று என்று கொன்றைவேந்தனில் குழந்தைகளும் அறியும் வண்ணம் பாடியுள்ளார்.

## ஆலய தரிசன விதிகள்

ஆலய தரிசனத்துக்குப் போகின்றவர்கள் சில நியதிகளுக்குக் கட்டுப்பட்டவராய்ச் செல்லல் வேண்டும். இறைவன் எமை உடையவர். நாம் அவரின் உடைமைப் பொருள். அவரைக் காணப்போகும் நாம் அன்புள்ளத்தோடு அடக்க ஒடுக்கம் ஒழுக்கம் உள்ளவராய் உடம்பு, உடைகள், உள்ளம் தூய்மையுடையவராய்ப் போதல் வேண்டும்.

1. நீராடித் தூய ஆடை அணிந்து, திருநீறு பூசி, இயலுமாயின் உருத்திராக்கம் பூண்டு போதல்.
2. வெறுங்கையுடன் போகாமல் மலர், வெற்றிலை, பாக்கு பழம், தேங்காய், கற்பூரம் முதலியவற்றை அவரவர் வசதிக்கேற்றவாறு எடுத்துச் செல்லல்.
3. ஐந்தெழுத்தை இடைவிடாது ஜெபித்துச் செல்லல்.
4. கோபுரத்தைக் கண்டவுடன் தலை தாழ்த்தி வணங்குதல்.

5. வெளிப் பிராகாரத்தைச் சுற்றிவந்து கோபுரத்தை வணங்குதல்.

6. கால் கழுவி துவாரபாலகர்களை வணங்கி உத்தரவு கேட்டு உள்ளே புகுந்து உட்பிராகாரத்தை வலம் வருதல். திருக்கோயிலில் ஆதிமூலம், வசந்தமண்டபம், யாகசாலை, பரிவார தெய்வ சந்நிதானம் முதலிய இடங்களில் எல்லோரும் தீபாராதனை காணக்கூடியதாக நாம் ஒதுங்கி நின்று வழிபடுதல் சமயப்பண்பாகும்.

7. கொடிமரத்துக்கு இப்பால் வீழ்ந்து வணங்கிப் பத்திர லிங்கமாய பலி பீடத்தையும், பக்குவான்மாவாய நந்தி எம்பெருமானையும் வணங்கிப் பாவச் சுமை, குற்றங் குறைகளைப் பலி பீடத்தருகில் விட்டுவிட்டதாகப் பாவனைசெய்து உள்ளே சென்று அர்ச்சனை செய்வித்துப் பிரசாதம் பெறுதல்.

8. மீண்டும் கொடிமரத்துக்கு இப்பால் வீழ்ந்து வணங்கி உட்பிராகாரத்தை வலம்வருதல்.

9. வலம் வரும்போது பிராகாரத் தெய்வங்களையும் விமானத்தையும் வணங்கி ஒதுக்கில் ஒடுக்கத்தில் இருக்கும் சண்டேசுரரை வணங்கி, சுவாமி இன்று கும்பிட்ட பலனைத் தந்தருளும். அடியேன் திருக்கோயிலில் செய்த குற்றம் இருப்பின் பொறுத்தருளும். அடியேன் திருக் கோயிலில் எதுவும் எடுத்துப் போகவில்லை என்று மனத் துட் சொல்லி வணங்குதல்.

10. கொடிமரத்துக்கு இப்பால் வீழ்ந்து வணங்கி, ஒருபுறம் ஒதுங்கி ஒடுக்கத்தில் அமர்ந்து இருந்து பஞ்சாக்கர ஜெபஞ் செய்தல்.

11. ஆலயப் பிராகாரத்தை மும்முறைக்குக் குறையாமல் வலம் வரும்போது பிராகாரமூர்த்திகளுக்குரிய பாடல் களைப் பண்ணோடு பாடித்துதித்தல்.

12. விநாயகப் பெருமானைத் தரிசிக்கும்போது, முறையாகக் குட்டித் தோப்புக்கரணம் போட்டுக் கும்பிட்டு எழுதல்.

## சைவக் கற்பனைகள்

திருநீறு பூசிச் சிவனை மறவாதிருத்தல்.
திருமுறைகளைப் பாடமாக்கிப் பண்ணோடு படித்தல்.
கட்டாயமாக சிவதீட்சை பெற்றுக்கொள்ளல்.
வேதங்கள் சிவாகமங்களைப் போற்றுதல்.
பிராமணர்களுக்கு மதிப்புக் கொடுத்தல்.
திருக்கோயிலுக்கு ஒழுங்காகச் செல்லல்.
தாய், தந்தை, குரு இவர்களை வணங்குதல்.
தமிழ் மொழியை விரும்பிப் படித்தல்.
சைவசமயத்தைக் காப்பாற்றிக் கொள்ளல்.
மற்சம், மாமிசம், மது உண்ணாதிருத்தல்.
சத்தியத்தையும் தருமத்தையும் மறவாதிருத்தல்.
உத்தமன் எனப் பெயர்பெற வாழுதல்.

## பனைவளம் பெருக்கும் பண்பாடு

காதோலை வந்ததும் பனையாலே, கழுத்துக்குத் தாலியும் பனையாலே, பண்பாடு பெற்றதும் பனையாலே, பயன்மிகப் பெற்றதும் பனையாலே என்ற பிரகாரம் யாழ்ப்பாணத் தமிழ் நாகரிகம் பனைமரத்தை அடிப்படையாகக் கொண்டது. பனை எங்கள் வாழ்வு. பனையை வளர்த்தால் அது பயன் தந்து நம்மை வாழ்விக்கும். பனை எங்கள் வாழ்வு. பனை எங்கள் வளம். பனை எங்கள் உணவு, பனை எங்கள் ஊட்டம். உணவு தருவது பனை. உறைவிடம் தருவது பனை. பசிப்பிணி நீக்கிப் பஞ்சம் போக்கும் பனை மரங்களை நாம் பெருமளவில் உண்டாக்குதல் வேண்டும். கலாநிதி பண்டிதமணி கணபதிப் பிள்ளை அவர்கள் விஜயதசமி நாட்களைப் பனையபிவிருத்தி நாட்களாகக் கொண்டாடும் வண்ணம் விண்ணப்பித்து வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் பனை வளத்தோடு மரம் கொடி செடிகளையும் விஜயதசமி நாட்களில் நாட்டிப் பசுமை வளம் உண்டாக்குமாறு அவர் விரும்பியுள்ளார்கள்.




மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகள்
காசுத்தாள்கள்போல் பெறுமதிவாய்ந்தவை.
அவற்றைச் சேகரித்துப் பெறுமதிவாய்ந்த
பொருள்களை வெகுமதியாகப் பெறுங்கள்.

- பெரிய கட்டில் விரிப்பு
- அழகிய துவாய்
- அழகிய பொலித்தீன் பை
- காந்திப் படமுள்ள கதர் பை
- காந்தியின் சிலை
- பாரதியாரின் சிலை
- அறிவு நூல்கள்
- நீதி நூற்கொத்து
- ஆத்திசூடி ஆங்கில உரை
- கொன்றை வேந்தன் ஆங்கில உரை
- சுவாமிப் படங்கள்
- நால்வர் படங்கள்
- பெரியவர்களின் படங்கள்
- அப்பியாசக் கொப்பி
- நீதிக் குரங்குப் பொம்மை
- பனையோலைத் தொப்பி

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: **7233**

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 7002